தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைப் போலவே இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் பாசிச ராஜீவ் கும்பலின் எதிர்பார்ப்புகளைப் பகற்கனவுகளாக்கி விட்டன. இருந்த போதும் "ஏறக்குறைய 60 சதவிகித மக்கள் வாக்களித்தனர். ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று விட்டது; தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) ஆகிய தீவிரவாதக் குழுக்களின் புறக்கணிப்புக் கோரிக்கையையும் வன்முறைப் பாதையையும் மீண்டும் நிராகரித்து விட்டார்கள், இலங்கை மக்கள் என்கிற சாக்கு, சமாதானப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

உண்மையோ வேறு விதமாக உள்ளது. இலங்கையின் இரு பிரதானக் கட்சிகளுமே இந்திய இராணுவம் அங்கே நீடிப்பதை எதிர்ப்பதாகக் கூறித்தான் ஓட்டுப் பொறுக்கின. 59 சதவிகித மக்களே வாக்களித்துள்ளனர். அதுவும் ஆளும் கட்சியின் எடுபிடியான தொண்டமானின் தயவிலே மலையகத் தமிழர்கள் ஏறக்குறைய 85 சதவிகிதத்தினர் வாக்களித்ததால் மொத்த வாக்குப்பதிவு கணிசமான அளவு உயர்ந்துள்ளது. தென்னிலங்கையில் பல வட்டாரங்களில் ஒரு சதவிகிதத்தினரே வாக்களித்தனர். அங்கும் கிராமப் புறங்களிலே 30 சதவிகிதத்துக்கும் குறைவானவர்களே வாக்களித்தனர். மொத்தம் 93 லட்சம் வாக்காளர்களில் 28 லட்சம் பேரே அதாவது 30 சதவிகிதத்தினரே ஆளும் கட்சியை ஆதரித்தனர். இந்தத் தேர்தல்களிலும் எவ்வளவு மோசடிகள் நடந்துள்ளன என்கிற விவரம் இனிமேல் தான் வரும்.

# துரோகிகள் ஆக்கிரமிப்பாளர் முகத்திலே கரிபூசினார்கள் ஈழமக்கள்

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தையும், இந்திய ஆக்கிரமிப்பையும் அப்படியே ஏற்று ஆதரித்து வந்த போலி சோசலிஸ்டுகள், போலிக் கம்யூனிஸ்டுகள் அடங்கிய கூட்டணி இந்தத் தேர்தல்களிலே ஏறக்குறைய துடைத்தெறியப்பட்டு விட்டது. அதே போல ஈழத்திலே நடந்த தேர்தல்களிலே பாசிச ராஜீவ் கும்பலின் அடிவருடிகள் மண்ணைக் கவ்வியுள்ளனர்.

அமிர்தலிங்கம் - சிவசிதம்பரம் தலைமையிலான "தமிழர் ஐக்கிய விடுதலை" முன்னணி என்ற கடைந்தெடுத்த துரோகக் கும்பல் படுதோல்வி அடைந்துள்ளது. "சிங்கள மற்றும் இந்திய இராணுவங்கள் நடத்திய மக்கள்திரள் படுகொலையைத் தமிழ் மக்கள் சந்தித்துக் கொண்டிருந்த போது, ஆறு ஆண்டுகள் சென்னை விருந்தினர் மாளிகையில் புகுந்து கொண்டு அரசியல் போராட்டங்களில் இருந்து அந்நியப்பட்டுப் போன இந்தச் சுயநலக்கும்பல் இப்போது இலங்கை நாடாளு மன்றத்துக்குத் தம்மைத் தேர்ந்தெடுக்கும் படி பிச்சையெடுக்கிறார்கள்" என்று புலிகள், அமிர்தலிங்கம் கும்பல் மீது குற்றஞ்சாட்டியது. அதை அங்கீகரிக்கும் வகையிலே அக்கும்பலை ஈழமக்கள் தோற்கடித்து மண்ணைக் கவ்வச் செய்துள்ளனர்.

பாசிச ராஜீவ் கும்பல், ஈழத் துரோகிகள் அடங்கிய தமது கைப்பாவை அரசை ஈழத்தில் நிறுவுவதற்காக கடந்த நவம்பரில் நடத்திய தேர்தல்கள் எவ்வளவு மோசடியானவை என்று இந்தத் தேர்தல் முடிவுகள் நிரூபித்து விட்டன. ஈழத்தின் மாகாண சபைத் தேர்தலிலே பெரும்பான்மையாக, குறிப்பாக வடபகுதியிலே போட்டியின்றி ஈழத் துரோகக் கும்பலைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் உட்பட அதன் அனைத்து நடவடிக்கைகளையும் ஈழமக்கள் ஆதரிப்பதாகப் பீற்றிக் கொண்டனர். அது துப்பாக்கி முனையிலே நடந்த மோசடிதான்.
கும்பலின் படுதோல்வி இதையே காட்டுகிறது.

சுயேச்சைகளாகப் போட்டியிட்ட ஈரோஸ் என்ற சமரசவா
ஈழத்தின் பெரும்பான்மையான இடங்களைப் பிடித்துள்ள
தேர்தலையும் புறக்கணிக்கும்படி கோரியபோதும் புலிகள், ஈரோஸ்
ஆதரித்ததாக கூறப்படுகிறது. அதை உறுதி செய்யும் ஆத
தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஈரோசின் தலைமையும்
சந்தர்ப்பவாதிகள், சமரசவாதிகளைக் கொண்டதுதான், என்றபோ
கருத்தறியவே தேர்தலில் போட்டியிட்டோம்; நாடாளும
போகமாட்டோம்; புறக்கணிப்போம்" என்று அவர்கள் அறிவித்
எவ்வாறாயினும் பெரும்பான்மையான ஈழமக்கள் மீண்டு
தெளிவுபட, உறுதிபட தமது கருத்தைச் சொல்லியுள்ளார்க
-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் இந்திய ராணுவ ஆக்கிரமிப்பு உ
-இலங்கை பாசிஸ்டுகளின் எந்தத் தீர்வையும் ஈழமக்கள் ஏற்கவில்
நிராகரிக்கிறார்கள். விடுதலை—சுதந்திரத்துக்கான சுய நிர்ண
போராட்டத்திற்கு உறுதியான ஆதரவு தருகிறார்கள். புலிகளின்
நடவடிக்கைகளையும் அப்படியே ஏற்காவிடினும் ஆக்கிரமிப்புக்
போராட்டத்தில் அவர்களையே ஆதரிக்கின்றனர்.

இராணுவ ரீதியில் புலிகள் முடக்கப்பட்டு விட்டார்கள் என்
இந்திய, இலங்கை பாசிஸ்டுகள் பிரச்சாரம் செய்தபோதும் அங்கி
செய்திகள் அதை மறுக்கின்றன. சமீபத்தில் கூட புலிகளின் தா
இந்திய இராணுவத்தின் இழப்புகளும் அதிகரித்துள்ளன. "யாழ்
பகுதியிலிருந்து 300 இளைஞர்கள் புதிதாகப் புலிப் படையில் சே
சிவில் நிர்வாகம், வங்கிகள், அஞ்சலகங்கள் ஆகியவற்றைத்
முடுவதும் கூட புலிகள் விருப்பப்படி செய்ய முடியும். அவ்வளவு
செல்வாக்கு புலிகளுக்கு இருக்கிறது" என்று இந்தியப் பத்
எழுதுகின்றன. சமீபத்தில் யாழ் பல்கலைக் கழகத்தைத் திறந்தவு
இராணுவத்துக்கு எதிராக புலிகளுக்கு ஆதரவாக வெ
ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்கள், மாணவர்கள்.

பாசிச ராஜீவ் கும்பலைப் பொறுத்தவரை இலங்கையி
தேர்தல்கள் நடத்தி விட்டதையே பெரும் வெற்றி என்று பீற்றி
போதும், தப்பிக்க வழியின்றி முட்டுச் சந்திலே போய் சிக்கி
நிலையில் தான் உள்ளது. தனிஈழம் தான் ஒரே தீர்வு என்று இதுவ
அடித்துவந்த கருணாநிதி, "இப்போதும் ஈழம் தான் எனது
இருந்தாலும் அது சாத்தியமில்லை" என்று ஆட்சியைப் பிடித்த
வாசிக்கிறார். ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ராஜீவுட
செய்து கொள்வார் என்பது நிச்சயம் என்றாலும் எம்.ஜி.ஆ
சரணடைந்து, தனது சொந்த அரசியல் ஆதயங்களை விட்டுக்
மாட்டார், கருணாநிதி. எனவே மீண்டும் போர் ஓய்வு, புலிகளுட
பேச்சு வார்த்தைகள் என்கிற நாடகம் - பேரம் நடக்கும். "கரு
முயற்சியினால் தீர்வு" என்கிற அளவு, அதுவும் நாடாளுமன்ற
வரவிருக்கும் சமயத்தில் ராஜீவும் விட்டுக்கொடுக்க போவதில்லை.
தொகை தவிர) வேறு அரசியல் சலுகைகள் வழங்குவதற்கா
-பிரமதேசாவிடம் எதுவுமே இல்லை. அதாவது ஈழ மாகா
உரிமையைப் புலிகளுக்குத் தருவதாகப் பேரம் பேசக்கூட மு
தேர்தலும் நடத்தி கைப்பாவை ஆட்சி நிறுவிவிட்டனர். அதைக்
பேரம் ராஜீவ் கும்பலை இன்னும் மோசமாக அம்பலப்படுத்திவி
சமயம் சிங்கள இனவெறியர்களின் நிர்ப்பந்தம் காரணமா
-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை திருத்தி எழுதும் படியும், ஈழத்தி
-கிழக்கு மாகாண இணைப்புப் பற்றி கிழக்குப் பகுதி மக்களிடையே
கணிப்பு நடத்தும்படியும் நிர்ப்பந்திக்கப் படுவார்கள்.

பாசிச ராஜீவ் கும்பலுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்
பயன்படுத்தி ஈழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமைப் போ
முன்னேறுவார்கள் என்று நம்புகிறோம். சிங்கள சிவிலியன்களை
செய்வது, ஈழ ஜனநாயக இயக்கங்களை ஒடுக்குவது ஆகிய
போக்குகளைக் கைவிட்டு பெரும் அளவில் அரசியல் அணி தி
செய்வதன் மூலம் தான் புலிகளின் இராணுவப் போராட்டமும் பல
வெற்றி பெறவும் முடியும். அதற்கு மாறாக, உள்நாட்டில் பல
ஜனநாயக மறுப்பு மற்றும் வெளிநாடுகளில் கருணாநிதி
பிழைப்புவாதிகளைச் சார்ந்து நிற்பது என்கிற போக்கு தொடருமா
விடுதலைப் போர் பலவீனமடையும்.